Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

நகர் ஊரமைப்பு அலுவலகம் புதுக்கோட்டை மாவட்டம்,
அவர்களின் நடவடிக்கைகள்,
முன்னிலை திரு.எஸ்.தனராசு.பி.இ.,

ந.க.எண்.148/2021/புமா நாள்.21.06.2021

திருவள்ளுவர் ஆண்டு 2052, பிலவ வருடம், ஆனி திங்கள் 07-ஆம் நாள்

பொருள் மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் - திருமயம் வட்டம்/ஊராட்சி ஒன்றியம் - குழிபிறை ஊராட்சி/கிராமம், சர்வே எண்.134/7ஏ-ல் 0.87ஏக்கர் (3550.00ச.மீ) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை
1. மனுதாரர் திரு.RM.முத்துக்குமார் அவர்களின் விண்ணப்பம் நாள்.03.02.2021.
2. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.148/2021/புமா, நாள்.05.03.2021.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர். சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ நாள்.24.12.2020.
4. அரசாணை எண.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை, நாள்.04.06.2004.
5. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை, நாள்.04.05.2017.
6. மனுதாரர் திரு.RM.முத்துக்குமார் அவர்களின் விண்ணப்பம் நாள்.19.03.2021.
7. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
8. அரசாணை எண். 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை UD4(3), நாள்.23.09.2020.
9. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை UD4(1), நாள்.09.12.2020.
10. அரசு கடிதம் எண்.19113, நவ4(3), 2017-1. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை, நாள்.30.08.2017.
11. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண்.13686-2017/LA2 நாள்.08.09.2017.
12. மனுதாரரால் உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்ட இரசீது இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த நாள்.07.06.2021 மற்றும 08.06.2021.

******

..2..

9842228930

பார்வை 1-ல் சுட்டிய மனுதாரர் கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்.05.03.2021-ன் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் வழங்கப்பட்டது. பார்வை 6-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானபத்திர எண்.869/2021 நாள்.15.03.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவிற்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/மா.ந.ஊ.அ(புமா) எண்.28/2021** என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3. மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி, அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கபட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நிலஅளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள், வரைபடங்கள் மற்றும் தானபத்திர அசல் ஆகியவை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை

1. (a) பார்வை 9-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47(11)-ன் படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of local Body shall be issued to the applicant(s) directly.
   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாதநிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

..3..

3. பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or buildings, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority–ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 5-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3-ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. மனைகளுக்கான நன்னிலை வரி மற்றும் இதர கட்டணங்களை உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை அவர்களால் மனுதாரரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

21/6/21

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

21/6/21

<u>இணைப்பு</u>

1.வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் (2 தொகுப்பு)

2. தானபத்திர எண்.869/2021-ன் அசல்

பெறுநர்

தலைவர்,
குழிபிறை ஊராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம்.

நகல் மனுதாரர் (உள்ளாட்சி மூலமாக)

திரு.RM.முத்துக்குமார்,
5/15சி, சுப்பிரமணியர் கோவில் தெரு,
குழிபிறை கிராமம்,
திருமயம் வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

தமிழ்நாடுஅரசு
நகர் ஊரமைப்புத் துறை,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

கோப்புஎண்.148/2021/புமா

நாள்.21.06.2021

ம.வ/மா.ந.ஊ.அ(புமா) எண்.28/2021

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ளபகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.
8. மனுதாரர் மனைப்பிரிவு தொடர்புடைய தலைவர், குழிபிறை ஊராட்சி அவர்களிடம் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்குமுன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் நகர் ஊரமைப்பு துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதிபெறவேண்டும்.
9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்டஅனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்படவேண்டும்.

   ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொதுதிறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.
10. மனுதாரர் நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட

..2..

மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'X4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின்படி நிலஉரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நிலஉரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.
12. நிலஉரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.
13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

விவரம்		பரப்பளவு	விழுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	-	2550.00ச.மீ	-
ஒதுக்கிய மனைகள்	-	20	-
பொது ஒதுக்கீடு மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது. 1.பூங்கா	-	பூங்கா ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய பரப்பளவிற்கு ஈடான அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது	-
2. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள்	-	1031.93ச.மீ	-
3.உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு	-	12.90ச.மீ	0.51%
4.தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது	-	12.90ச.மீ	0.51%
விற்பனைக்குரியவை EWS மனைகளின் பரப்பு மனை எண்கள்	-	-	-

21/6/21

உதவி இயக்குநர்,
மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

குழிபிறை ஊராட்சி மன்றத்தலைவரின் செயல்முறைகள்
முன்னிலை : எஸ்.அழகப்பன்

ந.க. 1/2021 நாள்:18.10.2021

பொருள்: மனைப்பிரிவு வரைபட அனுமதி - திருமயம் ஊராட்சி ஒன்றியம் -குழிபிறை கிராம ஊராட்சி- குழிபிறை கிராமம் மனைப்பிரிவு- திரு.RM.முத்துக்குமார்- புல எண்.134/7A-ல் 0.87 ஏக்கர் பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு - கொள்கை அளவில் தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்டது - வரைபட அனுமதி வழங்கி உத்தரவிடல்.

பார்வை:
1. அரசாணை(நிலை) எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (ந.வ.து (3) நாள்:04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (ந.வ.து(3) நாள்:13.10.2017.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் புதுக்கோட்டை அவர்களின் நடவடிக்கைகள் ந.க. எண்.148/2021/பு.மா நாள்:21.06.2021.
4. வரைபட அனுமதி எண்: ம.வ/மா.ந.ஊ. இ(புமா) எண்:28/2021
5. பூங்கா தானபத்திரம் எண்: 869/2021, நாள்: 15.03.2021
6. சார்பதிவாளர், திருமயம் அர்களின் வழிகாட்டி மதிப்புக்கடிதம், ந.க.128/2021, நாள்: 29.07.2021

******

உத்தரவு:

திருமயம் ஊராட்சி ஒன்றியம் குழிபிறை ஊராட்சி, குழிபிறை கிராமம், புல எண். 134/7A-ல் பார்வை(3) -ல் காணும் செயல்முறைப்படி 0.87 ஏக்கர் பரப்பளவிலான மனைப்பிரிவானது மனுதாரர் திரு.RM.முத்துக்குமார் என்பவரால் விற்பனை செய்யப்படாத மனையிடமாக கருதி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் புதுக்கோட்டை மூலம் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (In principle approval) வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவில் தெரிவிக்கப்பட்டவாறு விண்ணப்பதாரர் கீழ்கண்ட விபரங்கள் சமர்ப்பித்துள்ளார்.

1. பூங்கா மற்றும் சாலைக்கென 10% இடம் ஊராட்சிக்கு ஊராட்சி மன்றத்தலைவர் குழிபிறை ஊராட்சிக்கு தானமாக வழங்கியுள்ளார். சார்பதிவாளர் திருமயம் ஆவண எண் 869/2021, நாள்: 15.03.2021

2.குழிபிறை ஊராட்சியின் மனைப்பிரிவுக்கான தனிக்கணக்கில் கூராய்வு கட்டணமாக ரூ.1000/-(ரூபாய் ஓராயிரம் மட்டும்) செலுத்தப்பட்டுள்ளது.
(செலுத்திய நாள்:29.09.2021)

மேற்படி மனைப்பரிவுக்கு பார்வை(6)-ல் காணும் சார்பதிவாளர், திருமயம் அவர்களின் வழிகாட்டி மதிப்புக்கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு மனைப்பிரிவின் மொத்தப்பரப்பளவு 2518.07-ச.மீ மற்றும் மனுதாரர் உபயோகத்திற்கான பரப்பளவு 144.00-ச.மீ ஆகக்கூடுதல் 2662.07ச.மீ-க்கு சந்தை மதிப்பில் 3% தொகை ரூ.435/-ச.மீ வீதம் ரூ.34740/- (DPCode-0217-60-800-AS-0005) தலைப்புக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. (செலுத்திய நாள்:28.07.2021 மற்றும்29.09.2021)

எனவே, குழிபிறை கிராம ஊராட்சி புல எண். 134/7A-ல் அமைந்துள்ள 1 முதல் 21 எண்ணிட்ட 21 மனைகளுக்கும் மற்றும் மனுதாரருக்கான உபயோகத்திற்கும் மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி அனுமதி வழங்கியும், மேற்கண்ட மனைகளுக்கு மட்டும்

A6

பத்திரப்பதிவு மேற்கொள்ள ஏதுவாக தடையின்மை வழங்கியும் இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

1. நில உரிமம் குறித்து மனுதாரரால் வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது கட்டணங்கள் செலுத்தியதில் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரியவந்தால் மற்றும் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் அரசுக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும். மேற்கண்ட இனங்கள் அரசால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழுப்பொறுப்பும் மனுதாரரையே சாரும்.
2. அரசாணை (நிலை) எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:13.10.2017-இல் விதி எண்:7(g)(ii)-இன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் அரசுக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

4 .பார்வை(4)-இல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

இவ்வங்கீகாரமானது மனையிடம் வரன்முறைப்படுத்தப்பட்டதற்கு மட்டுமே வழங்கப்படுகிறது. மேற்படி மனையிடத்தில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள நேரிடும் நிகழ்வுகளில் மனுதாரர்கள் தனியாக விண்ணப்பித்து கட்டுமானத்திற்கான உரிய வரைபட தொழில்நுட்ப அனுமதி தனியாக பெறப்பட வேண்டும்.

ஊராட்சி மன்றத்தலைவர்
குழிபிறை ஊராட்சி

தலைவர்
ஊராட்சி மன்றம்
குழிபிறை ஊராட்சி

பெறுநர்:
திரு.RM. முத்துக்குமார்,
5/15சி,சுப்பிரமணியன் கோவில் தெரு,
குழிபிறை கிராமம், திருமயம் வட்டம்,
புதுக்கோட்டை.

நகல்:
1.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியரக வளாகம்,
புதுக்கோட்டை.
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),புதுக்கோட்டை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. சார் பதிவாளர் அலுவலகம்,திருமயம்.(மேற்படி அனுமதியின்படி உரிய பதிவுகள் மேற்கொள்ள).
4.தி3 இருப்புக் கோப்புக்கு.
5. ஊராட்சி மன்றத்தலைவர், குழிபிறை ஊராட்சி



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate